

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 259 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 17 – வியாழக்கிழமை 30 ஏப்ரல் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 259 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 17 - Thursday 30 April 2026 - Madurai 8 Pages ₹ 5.00


### தமிழெனும் ஆயுதமேந்தி

## இனமானம் உரைத்த பாவேந்தர் புகழ் வாழியவே!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, ஏப். 30 - "தமிழெனும் ஆயுதமேந்தி இனமானம் உரைத்த பாவேந்தர் புகழ் வாழியவே" என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தமிழெனும் ஆயுதமேந்தி இனமானம் உரைத்த பாவேந்தர் புகழ் வாழியவே"

தமிழின் இனிமையையும் தமிழரின் உயர்வுக்கான வழியையும் தன் கவிதையால் காட்டியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பாவேந்தரின் திண்மை நிறை தமிழ், ஒளியென நம் இனத்திற்குத் துணை நிற்கட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.





கொடைக்கானலிலிருந்து சென்னை புறப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நெகிழ்ச்சியுடன் வாழ்த்தி வழியனுப்பி வைத்த பொதுமக்கள்!

### தி.மு.கழகக் கூட்டணி அமோக வெற்றிபெறும் என

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் வாழ்த்து!

## கொடைக்கானலிலிருந்து சென்னை புறப்பட்ட முதல்வரை நெகிழ்ச்சியுடன் வாழ்த்தி வழியனுப்பினர்!

**கொடைக்கானல், ஏப். 30 - தி.மு.கழகக் கூட்டணி அமோக வெற்றி பெறும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். கொடைக்கானலிலிருந்து சென்னை புறப்பட்ட முதல்வரை நெகிழ்ச்சியுடன் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவடைந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடைக்கானலுக்கு குடும்பத்துடன் சென்றிருந்தார்.

அங்கு தினமும் சாலையில் நடைபயிற்சி, சைக்கிளிங் உள்ளிட்டவை மேற்கொண்டு பொதுமக்களைச் சந்தித்து உற்சாகமடைந்தார்.

இந்நிலையில், தனது கொடைக்கானல் பயணத்தை முடித்து கொண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.04.2026) காலை சென்னை புறப்பட்டார்.

அப்போது, தம்மை காண வழிநெடுகிலும் நின்றிருந்த பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை சந்தித்து பேசினார். காரில் இருந்து இறங்கி தங்களிடம் அன்பாகவும், புன்னகையுடனும் பேசிய முதலமைச்சரைக் கண்டு பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

முதலமைச்சருக்கு பூங்கொத்தும் கொடுத்தும், செல்ஃபி எடுத்தும் மகிழ்ச்சியடைந்தனர்.

சட்டமன்றத் தேர்தலில் கண்டிப்பாக தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும் சிறுமி ஒருவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இதையடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடைக்கானலில் இருந்து புறப்பட்டு நேற்று சென்னை வந்தடைந்தார்.

சென்னை விமான நிலையத்தில் கழகத்தினர் திரளாகத் திரண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அன்புடன் வரவேற்றனர்.

### அதானிக்காக வளர்ச்சி என்ற பெயரில்

## அந்தமானில் மழைக்காடுகளை அழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!



போர்ட்பிளேர், ஏப். 30 - அந்தமானில் ஒன்றிய அரசின் கிரேட் நிகோபார் மேம்பாட்டுத் திட்டம் என்பது நாட்டின் மிகப்பெரிய ஊழல் என்றும் வளர்ச்சி என்ற பெயரில் அதானிக்காக 160 சதுர கிலோ மீட்டர் மழைக்காடுகள் வெட்டப்பட்டு, இதன் மூலம் கோடிக் கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கப்படுவதாகவும் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டியுள்ளார்.

அந்தமான் மற்றும் நிகோபர் தீவுக்குச் சென்றுள்ள ராகுல் காந்தி அங்குள்ள பழங்குடியின தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது கிரேட் நிகோபர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு திட்டம் குறித்து பழங்குடியின தலைவர்கள் ராகுலிடம் கவலை தெரிவித்தனர்.

இந்த திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாமை, சுற்றுச்சூழல் அபாயங்கள் மற்றும் பழங்குடியினரின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இதுதொடர்பாக தனது சமூக வலைதளத்தில் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், அந்தமானில் ஒன்றிய அரசு செயல்படுத்த உள்ள திட்டத்தால் 160 சதுர கிலோ மீட்டர் மழைக்காடுகள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

அந்தமானில் ஒன்றிய அரசு செயல்படுத்த உள்ள திட்டத்தால் 160 சதுர கிலோ மீட்டர் மழைக்காடுகள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியில் தென்னிந்தியாவிலேயே

# அரசு மருத்துவ சேவையில் தமிழ்நாடு முதலிடம்!

## தேசிய புள்ளியியல் ஆய்வகம் தகவல்!

**சென்னை, ஏப். 30 - தென்னிந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர் விகிதம் அதிகமாக இருப்பதாக தேசிய புள்ளியியல் ஆய்வகம் தெரிவித்துள்ளது.**

தனியார் மற்றும் அரசு மருத்துவ சேவைகளைப் பயன்படுத்துவோர் தொடர்பான தரவுகளை தேசிய புள்ளியியல் ஆய்வகம் மாநில வாரியாக வெளியிட்டுள்ளது.

அதில், அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சைப் பெறுவோரின் விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

அதை ஒப்பீடு செய்யும் போது, கேரளத்தில் 30 சதவீதம் பேரும், கர்நாடகத்தில் 29.8 சதவீதம் பேரும் உள்ளனர்.

தெலுங்கானாவில் 29.3 சதவீதம் பேரும், ஆந்திரத்தில் 26.9 சதவீதம் பேரும், குஜராத்தில் 25.9 சதவீதம் பேரும், மகாராஷ்டிரத்தில் 18.6 சதவீதம் பேரும் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், தமிழ்நாட்டில் தான் 43 சதவீதத்தினர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெறுவோர் விகிதம் அதிகமாக இருப்பதாக தேசிய புள்ளியியல் ஆய்வகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஊரகப் பகுதிகளில் 47.5 சதவீதம் பேரும், நகர்ப்புறங்களில் 38.6 சதவீதம் பேரும் உள்நோயாளிகளாக அரசு மருத்துவமனைகளில் கடந்த ஓராண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய புள்ளியியல் ஆய்வகம் குறிப்பிட்டுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் அரசு மருத்துவமனைகளில் மருத்துவக் கட்டமைப்பு சிறப்பாக இருப்பதே இதற்குக் காரணம் என, பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர்.

## குத்தம்பாக்கம் பேருந்து முனையம் ஜூன் மாதம் திறப்பு!



சென்னை, ஏப். 30- குத்தம்பாக்கம் பேருந்து முனையம் வரும் ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் ஏற்படும் நெரிசலுக்கு தீர்வாக, கிளாம்பாக்கம் பேருந்து முனையம் கட்டப்பட்டு தற்போது இயங்கி வருகின்றது.

தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் 90 சதவீத அரசுப் பேருந்துகள் தற்போது கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும் நிலையில், ஈ.சி.ஆர். வழியாகச் செல்லும் பேருந்துகள், வேலூர், தருமபுரி போன்ற வட மாவட்டங்கள் மற்றும் பெங்களூருவுக்கு இயக்கப்படும் பேருந்துகள் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது.

இந்நிலையில், கோயம்பேடு மற்றும் பூந்தமல்லி பகுதிகளில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக திருமழிசை அடுத்த குத்தம்பாக்கத்தில் சுமார் ரூ.400 கோடி மதிப்பீட்டில் பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது.

24.8 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த நவீன பேருந்து முனையத்தின் கட்டுமானப் பணிகள் முடிந்துள்ள நிலையில், மின்சார இணைப்பு மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பேருந்து முனையம் வரும் ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மேலும் கூறியதாவது: இந்த முனையத்தில் இருந்து அரசு விரைவுப் பேருந்துகள், விழுப்புரம் மற்றும் சேலம் கோட்டப் பேருந்துகள், கர்நாடக அரசுப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

வேலூர், ஓசூர், பெங்களூரு, திருப்பதி மற்றும் திருவனந்தபுரம் போன்ற முக்கிய நகரங்களுக்குச் செல்லும் பயணிகள் இந்த முனையத்தின் மூலம் பெரிதும் பயனடைவார்கள்.

தேசிய நெடுஞ்சாலை உடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள இந்த முனையம், அண்டை மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகள் நகருக்குள் நுழையாமல் விரைவாகச் செல்ல வழிவகை செய்கிறது.

மேலும், பூந்தமல்லி பைபாஸ் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் இந்த பேருந்து முனையம் உள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.